**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 464** **நாள்: 24.12.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் திருநங்கைகளுக்கு பேரிடர் அபாய குறைப்பு குறித்த பயிற்சி வழங்கப்பட்டது.**

சென்னை – கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதிக்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற வெள்ள மேலாண்மைத் திட்டத்தின் கீழ், திருநங்கை சமூகத்திற்கான பேரிடர் அபாயக்குறைப்பு (DRR) பயிற்சி ரிப்பன் கட்டட வளாக கூட்டரங்கில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சி, ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) ஆதரவுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தின் ஒரு பகுதியாக, பெருநகர சென்னை மாநகராட்சியின் மழைநீர் வடிகால் துறை மற்றும் நிறுவன வலுப்படுத்துதல் மற்றும் சீர்திருத்த ஆலோசகர் (ISRC) குழுவின் ஆதரவுடன் ஏற்பாடு செய்யப்பட்டது.

பயிற்சியை மழைநீர் வடிகால்துறை கண்காணிப்பு பொறியாளர் திரு. ஏ. எஸ். முருகன், அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றினார். அவர் தனது உரையில், பேரிடர் மேலாண்மையில் திருநங்கை சமூகத்தினரைப் போன்ற பாதிப்புக்குள்ளாகும் அனைவரையும் உள்ளடக்கிய குழுக்களை தயார் நிலைப்படுத்துதல் மட்டுமே நகரின் பேரிடர் எதிர்ப்புத்திறனை வலுப்படுத்தும் என்றும் வலியுறுத்தினார்.

**இந்தப் பயிற்சியில் கீழ்க்கண்ட தலைப்புகளில் விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாடு வழங்கப்பட்டது :**

- பேரிடர் அபாயக் குறைப்பு பற்றிய அடிப்படை புரிதல்
- பேரிடர் காலங்களில் பாதிப்புக்கு உள்ளாகும் குழுக்களைஅடையாளம் காணல் மற்றும் உதவி
- அவசர தொலைபேசி எண்கள் மற்றும் நிவாரண முகாம்கள்
- தடுப்பு நடவடிக்கைகள், தயார்நிலை, நிவாரணம் மற்றும் மீட்பு
- பேரிடர் கால செயல் முறை வழிகாட்டுதல்கள் (SOPs)

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் (TNSDMA) மற்றும் ISRC குழுவின் நிபுணர்கள் உரைகள், கலந்துரையாடல்கள், காணொலிகள் மற்றும் நடைமுறை பயிற்சிகள் வழங்கப்பட்டது.

பயிற்சியில் கலந்து கொண்ட திருநங்கை சமூக உறுப்பினர்கள், வெள்ளம் உள்ளிட்ட பேரிடர்களின் போது எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து தங்களது அனுபவங்களைப் பகிர்ந்தனர். இந்த முயற்சி, திருநங்கை சமூகத்தினரை பேரிடர் காலத்தில் தங்களை பாதுகாத்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல், சமூகத்திற்கு உதவும் பொறுப்புள்ள பங்குதாரர்களாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**

**GREATER CHENNAI CORPORATION**
**PRESS RELEASE**

**P.R.No. 464** **Date: 24.12.2025**

## Disaster Risk Reduction Training for Transgender Community Conducted in Chennai

As part of the Integrated Urban Flood Management Project for the Chennai–Kosasthalaiyar Basin, a Disaster Risk Reduction (DRR) Training Programme for the Transgender Community was successfully conducted on at Amma Maaligai Conference Hall, Greater Chennai Corporation (GCC).

The training was organised by the Storm Water Drain Department, Greater Chennai Corporation, under the Asian Development Bank (ADB)-supported project, with support from the Institutional Strengthening and Reforms Consultant (ISRC).

The programme was inaugurated by Mr. A. S. Murugan, Superintending Engineer, Storm Water Drain Department, who delivered the Special Guest Address. In his address, he emphasised the importance of inclusive disaster preparedness and highlighted the need to ensure that vulnerable and marginalised communities, including the transgender community, are actively integrated into disaster management planning and response mechanisms.

The training focused on enhancing awareness and preparedness among transgender community members on:

- Disaster Risk Reduction concepts
- Identifying and supporting vulnerable groups during disasters
- Emergency helpline numbers and relief shelters
- Mitigation, preparedness, response, and recovery measures
- Standard Operating Procedures (SOPs) during emergencies

Sessions were facilitated by experts from the Tamil Nadu State Disaster Management Authority (TNSDMA) and the ISRC team, using interactive methods such as presentations, group discussions, videos, and practical exercises.

The programme witnessed active participation from members of the transgender community, who shared their experiences and concerns related to disasters, particularly flooding in Chennai. The initiative aims to empower the community as informed stakeholders and first responders during emergencies, contributing to a more resilient and inclusive city.

**Issued : Joint Director/Public Relations Officer,**
**Greater Chennai Corporation.**